IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

DEPOSITION OF WITNESS

OS. No. 135/2018 நாள்.23.02.2026

DW1- திருமதி. உமா, க/பெ. திரு.ரவிவர்மன்

4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

என் மாமனார் பெயர் என்ன என்றால் துரைமாணிக்கம். அவர் கும்பகோணம் அரசு உதவி பெறும் பள்ளியில் தமிழாசிரியர் என்றால் ஆமாம். வழக்கு சொத்தில் பி அட்டவணையில் அதில் ஒரேஒரு சொத்து விவசாய நிலம் என்றும் மற்றவை மனைகட்டு என்றால் ஆமாம். ஏ அட்டவணை சொத்து என் மாமனார் எப்போது வாங்கினார் என்றால் தெரியாது, என் கல்யாணத்திற்கு முன்பே வாங்கிவிட்டார். அந்த சொத்து அவரின் தனிபட்ட வருமானத்தில் வாங்கபட்டது என்றால் புனவாசல் சொத்தை விற்று வாங்கியதாக சொல்வார்கள் ஆனால் நேரடியாக தெரியாது. என்னுடைய எதிருரையில் சொல்லவில்லை என்றால் ஆமாம். புனவாசல் சொத்தின் சர்வே எண் தெரியுமா, ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர் குடும்பமே கும்பகோணத்தில் வசித்தார் என்றால் ஆமாம். 1979, 1980 களில் கும்பகோணம் சொத்தில் வீடு கட்டினார் என்றால் என் திருமணத்திற்கு முன்பே வேலை நடந்துகொண்டிருந்தது. இடத்தின் அளவு தெரியுமா என்றால் ஏழாயிரத்து சொட்சம் சதுரஅடி.. என் கணவர் கால்நடைமருத்துவர் என்றால் ஆமாம். அரசு கல்லூரியில் படித்தார் என்றால் ஆமாம். இளந்திரையன் என்ன படித்துள்ளார் என்றால் தெரியாது. அவர் வேலை பார்த்தார் என்றால் இல்லை என்எல்சியில் வேலை பார்த்தது யார் என்றால் 3ஆம் வாதி கண்ணன். 2வாதி மணிமொழி B.E படித்துள்ளார் என்றால் இல்லை பட்டதாரிதான். அவர் மஸ்கட்டில் பெரிய கம்பெனியில் வேலை பார்த்தார் என்றால் ஆமாம். அவர் குடும்பத்தில் படிக்காத ஆள் இளந்திரையன் மற்றும் கிள்ளிவளவன் என்றால் ஆமாம். கிள்ளிவளவன் புனவாசல் சொத்தை விவசாயம் செய்தார் என்றால் ஆமாம். கிள்ளிவளவன் குடும்பம் புனவாசலில் குடியிருந்தது என்றால் ஆமாம். மணிமொழி தனிபட்ட முறையில் புனவாசலில் சம்பாதித்து இடம் வாங்கியுள்ளார் என்றால் ஆமாம். அதையும் கிள்ளிவளவன் விவசாயம் செய்தார் என்றால் ஆமாம். மணிமொழி கும்பகோணத்தில் தனியாக கடன் வாங்கி வீடு கட்டினார் என்றால் ஆமாம். மணிமொழிக்கும் என் மாமனாருக்கும் சுமூகமான பேச்சுவார்த்தை இல்லை என்றால் ஆமாம். மணிமொழி, கண்ணன், இளந்திரையன் எல்லாரும் சேர்ந்து என் மாமனாருடன் சண்டைபோட்டுள்ளார்கள் என்றால் ஆமாம். கிள்ளிவளவன் அதன்பிறகு கும்பகோணத்திற்கு குடிபோய் 10, 20 வருடம் என்றால் 20 வருடமே இருக்கும் என் கணவர் மாமனார்

இருக்கும்போதே தனியாக இடம் வாங்கி வீடு கட்டினார் என்றால் வீடு கட்டிமுடிக்கும்போது இறந்துவிட்டார். என் மாமனார் எப்போது இறந்தார் என்றால் 1993. அவர் இறக்கும் காலத்தில் மாமனாருக்கு 1 முதல் 3 வாதிகளிடம் பேச்சுவார்த்தை இல்லை என்றால் ஆமாம். என் கணவர் எப்போது இறந்தார் என்றால் 1991. வழக்கு சொத்து சம்மந்தமாக திருநெயாறு முன்சிப் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்றால் எனக்கு தெரியாது. கிள்ளிவளவன் வாரிசு என்ன கட்சி சொல்கிறார் என்று தெரியுமா என்றால் தெரியாது. என் மாமனாரால் எழுதபட்ட உயில் 30.3.1993 இல் பதிவாகியுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. அ.வ எண் 82/1994 மற்றும் அ.வ 308/1995 லும் கிள்ளிவளவனால் உயில் இருப்பதை தெரிவித்து அதன் தீர்ப்புரையிலும் அதுபற்றி கட்சி சொல்லபட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்கண்ட உயில் படி கிடைத்து சொத்தை விற்றுள்ளார் என்றால் ஆமாம். அது அவரது அனுபவத்தில் உள்ளது என்றால் ஆமாம். வழக்கு சொத்து உயில் படி கிள்ளிவளவனுக்கு பாத்தியபட்ட சொத்து என்றும் வாதிக்கு பங்கு கிடையாது என்றால் எனக்கு தெரியாது.

6, 7 பிரதிவாதிகள் தரப்பில் 4, 5 பிரதிவாதிகளின் குறுக்குவிசாரணை ஏற்றுகொள்ளபட்டது.

<u>8 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u> இல்லை என முன்னிலைபடுத்தபட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எனது எதிர் வழக்குரையில் என்ன விபரம் என்பதை 3ஆம் பிரதிவாதி சொன்னார் என்றும் அதில் நான் கையெழுத்து செய்தேன் என்றும் சொன்னால் ஆமாம். அந்த விபரங்கள் எனது மகள்தான் சொன்னார் என்றும் நான் எதுவும் விபரம் சொல்லவில்லை என்றால் ஆமாம். எதிருரையில் சொல்லபட்ட விஷயங்கள் அனைத்தும் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். தற்போது பிரமாண பத்திரத்தில் உள்ள விபரமும், எதிருரையில் உள்ள விபரமும் வேறுவேறாக உள்ளது என்றால் ஒன்றாகதான் இருக்கும். எதிருரையில் தாவா சொத்துக்கள் அனைத்தும் கூட்டுகுடும்ப சொத்துக்கள் என்றும் புனவாசல் இடத்தை விற்று கும்பகோணத்தில் வாங்கியதாக சொன்னேன் என்றால் ஆமாம். கும்பகோணம் வட்டிபிள்ளையார் கோவில் தெருவில் உள்ள வீடு என் கணவர் பெயரில் உள்ளது என்றால் ஆமாம். கிள்ளிவளவனுக்கும் என் மாமனாருக்கும் சண்டைகள் இருந்து வந்ததா என்றால் இல்லை. நான் கிள்ளிவளவன் மற்றும் இளந்திரையன் ஆகியோர் தாவா அ அட்டவணை சொத்தில் வசித்தோம் என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 இல் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. என் அப்பா முருகபிரான் காரைபாக்கம் திருமானூர் அருகே உள்ள கிராமத்தில் வசிக்கிறார். வக்காலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் ஆமாம். வா.சா.ஆ.2இல் உள்ள கையெழுத்தும், வக்காலத்திலுள்ள கையெழுத்தும் ஒரேமாதிரி உள்ளது என்றால் நான்

போடவில்லை. கண்ணனை குறுக்குவிசாரணை செய்தபோதுதான் இந்த விஷயம் எனக்கு தெரியும். இதுதொடர்பாக காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கிற்காக பொய்யாக வா.சா.ஆ.2 இல் கையெழுத்து போடவில்லை என்று சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் கணவர் இறந்த 10நாளில் கருமாகாரியத்தன்று ஏற்பட்டதுதான் வா.சா.,ஆ.2 குடும்ப ஏற்பாடு என்றும் தற்போது வழக்கிற்காக கையெழுத்து போடவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி.
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.23 19:45:36 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.